SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இண்டியன்ஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

# மாலை எக்ஸ்பிரஸ்

விசுவாவசு வருடம் சித்திரை 26 | MAALAI EXPRESS | ஹிஜ்ஜிரி 1446 துல்கதா 10
மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

/maalaiexpressnews
● புதுச்சேரி ● வெள்ளிக்கிழமை, மே 9, 2025 ● வெளியூர்: 10-5-2025, சனிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 293 ● 8 பக்கம் ● ரூ.6

## ஜம்மு காஷ்மீரில் உள்ள தமிழக மாணவர்கள் பாதுகாப்பாக தாயகம் திரும்ப நடவடிக்கை : முதலமைச்சர்

**புதுடெல்லி, மே 9-**

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக, ‘ஆபரேஷன் சிந்தூர்’ என்ற பெயரில் பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத நிலைகளை குறிவைத்து இந்திய படைகள் ஏவுகணை தாக்குதல் நடத்தின.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடர்ந்து எல்லை பகுதிகளில் இருநாடுகளும் வான்வெளி தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் அப்பகுதியில் பதற்றமாக சூழ்நிலை நிலவி வருகிறது. பாகிஸ்தானின் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் தாக்குதலை இந்திய ராணுவம் முறியடித்து வருகிறது.

இந்த நிலையில் ஜம்மு காஷ்மீர் பகுதியில் உள்ள தமிழக மாணவர்கள் பாதுகாப்பாக தமிழ்நாடு திரும்ப நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். ஜம்மு காஷ்மீரில் கல்வி பயில சென்றுள்ள தமிழக மாணவர்கள் வெளிநாடு வாழ் தமிழர் நலவாரியத்தை அணுகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

டெல்லியில் உள்ள தமிழ்நாடு பவனும் நிலைமையை தீவிரமாக கண்காணித்து வருவதாக தமிழக அரசு தகவல் தெரிவித்துள்ளது. நிலைமை சீரடைந்தவுடன் மாணவர்கள் பாதுகாப்பாகவும் விரைவாகவும் அழைத்து வரப்படுவார்கள் என தமிழக அரசு உறுதி அளித்துள்ளது. காஷ்மீரின் பேஷன் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கடிதம் எழுதியிருந்த நிலையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காஷ்மீரில் உள்ள தமிழக மாணவர்கள் தொடர்பு கொள்ள உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. உதவி தேவைப்படும் மாணவர்கள் 9994433456, 7373026456 என்ற எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

உதவி தேவைப்படும் தமிழக மாணவர்கள் nrtwb.chairman@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு தொடர்பு தொடர்பு கொள்ளலாம்.

## இந்திய ராணுவத்திற்கு ஆதரவாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பேரணி

**சென்னை, மே 9-**

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடர்ந்து கடந்த 36 மணி நேரத்தில் எல்லையில் நிலைமை மோசமடைந்துள்ளது. பாகிஸ்தானின் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் தாக்குதலை இந்திய ராணுவம் முறியடித்து வருகிறது.

இந்த நிலையில் பாகிஸ்தானின் பயங்கரவாத தாக்குதலுக்கு எதிராகவும், இந்திய ராணுவத்திற்கு ஆதரவு தெரிவித்தும் சென்னையில் நாளை பேரணி நடைபெற உள்ளது.

பாகிஸ்தான் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுத்து வரும் இந்திய ராணுவத்திற்கு ஆதரவாக சென்னை டி.ஜி.பி. அலுவலகத்தில் இருந்து போர்நினைவு சின்னம் வரை நாளை மாலை 5 மணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பேரணி நடைபெறுகிறது.

இந்திய ராணுவத்தின் வீரத்தையும், தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் போற்றுவதற்காக நாளை பேரணி நடைபெறுகிறது. தமிழ்நாட்டு மக்கள் இந்த பேரணியில் பங்கேற்று, நமது ராணுவத்திற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

வீரத்துடன் போர் நடத்தி வரும் இந்திய ராணுவத்திற்கு நமது ஒன்றுபட்ட ஆதரவையும் வெளிப்படுத்த வேண்டிய தருணம். முன்னாள் படைவீரர்கள், அமைச்சர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்பார்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## ஜம்மு எல்லையில் ஊடுருவ முயன்ற 7 பாகிஸ்தான் பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

**ஸ்ரீநகர், மே 9-**

காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய ராணுவம் பாகிஸ்தானுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி பயங்கரவாத முகாம்களை அழித்தது.

இதையடுத்து பாகிஸ்தான் இந்தியா மீது தாக்குதல் நடத்த முயற்சித்து வருகிறது. இதனை இந்திய ராணுவம் முறியடித்து வருகிறது. மேலும் எல்லையில் பாகிஸ்தான் ராணுவம் தொடர்ந்து அத்துமீறி தாக்குதலை நடத்தி வருகிறது. இதற்கு இந்தியா தகுந்த பதிலடி கொடுத்து வருகிறது.

இந்தியாபாகிஸ்தான் இடையே பதற்றமான சூழ்நிலை நிலவி வரும் நிலையில் பாகிஸ்தானில் இருந்து எல்லை வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவ பயங்கரவாதிகள் முயற்சித்து வருகிறார்கள்.

அதை முறியடிக்க இந்திய ராணுவம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. நேற்று பஞ்சாப் மாநில எல்லையில் ஊடுருவ முயன்ற பாகிஸ்தானியரை எல்லை பாதுகாப்பு படையினர் சுட்டுக்கொன்றனர்.

இந்த நிலையில் ஜம்முவில் எல்லையில் இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற 7 பாகிஸ்தான் பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஜம்முகாஷ்மீர் எல்லையில் இந்தியா மீது பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் அதை பயன்படுத்தி எல்லையில் பயங்கரவாதிகள் ஊடுருவும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதில் ஜம்முவின் சம்பா பகுதியில் உள்ள எல்லையில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற 7 பாகிஸ்தான் பயங்கரவாதிகளை எல்லை பாதுகாப்பு படையினர் சுட்டுக்கொன்றனர். பயங்கரவாதிகள் ஊடுருவலை தடுக்க எல்லையில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் விமானி பிடிபட்டார்

# பாகிஸ்தான் மீது இந்திய கடற்படை தாக்குதல்

## முப்படை தளபதிகளுடன் ராஜ்நாத் சிங் இன்று ஆலோசனை



**ஸ்ரீநகர், மே 9-**

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் ‘ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது.

இதைத் தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உருவாகியது. அந்த வகையில் ஜம்முகாஷ்மீர், பஞ்சாப் மீது பாகிஸ்தான் நேற்று திடீர் ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டது. இதனால், இரு தரப்புக்கும் இடையே கிட்டத்தட்ட போர் உருவாகி உள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் மீது இந்திய கடற்படை தாக்குதலை தொடங்கியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்திய கடற்படை போர் கப்பல்கள் அரபிக்கடலில் இருந்து பாகிஸ்தான் துறைமுகம் மீது தாக்குதல் நடத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதனிடையே ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சல்மீர் பகுதியில் பாகிஸ்தான் போர் விமானம் நேற்று சுட்டு வீழ்த்தப்பட்டது. இந்த சம்பவத்தில் பாகிஸ்தான் விமானி பிடிபட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், நாட்டில் பாதுகாப்பு சூழல் குறித்தும், நேற்று இரவு நடந்த தாக்குதல் குறித்தும் தலைமை தளபதி மற்றும் முப்படை தளபதிகளுடன் பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் இன்று முக்கிய ஆலோசனை நடத்த உள்ளார். இந்த ஆலோசனையின்போது அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவு எடுக்கப்படலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

## மதுரையில் சித்திரை திருவிழா தேரோட்டம்: மாசி வீதிகளில் திரண்ட பக்தர்கள்

**மதுரை, மே 9-**

உலக பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் கோவில் சித்திரை திருவிழா கடந்த மாதம் 29ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாக்காலங்களில் தினமும் காலை, மாலை வேளைகளில் மீனாட்சி அம்மன், பிரியாவிடைசுந்தரேசுவரர் மதுரை வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம், திக்கு விஜயம் போன்ற வைபவங்களை தொடர்ந்து 10ம் திருநாளான நேற்று திருக்கல்யாணம் விமரிசையாக நடைபெற்றது. மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவை காண ஏராளமானோர் திரண்டனர்.

தொடர்ந்து அன்னதானம், திருக்கல்யாண விருந்து, மொய் செலுத்துதல் போன்றவையும் நடைபெற்றன. சித்திரை திருவிழாவின் மற்றொரு முத்தாய்ப்பு நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று காலை விமரிசையாக நடைபெற்றது. முன்னதாக 2 தேர்களும் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தன.

இன்று அதிகாலை 4 முதல் 4.30 மணிக்கு மீனாட்சி அம்மன், பிரியாவிடை சுந்தரேசுவரர் ஆகியோர் முத்தம்பல முதலியார் கட்டளை மண்டகப்படி, ராமநாதபுரம் சேதுபதி மகாராஜா மண்டகப்படிக்கு எழுந்தருளினர். அங்கு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன. தொடர்ந்து ஒரே பல்லக்கில் மீனாட்சி அம்மன், பிரியாவிடை சுந்தரேசுவரர் கீழமாசி வீதியில் உள்ள தேரடிக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு தீபாராதனைகள் காண்பிக்கப்பட்டன.



அதன்பிறகு பிரியாவிடை சுந்தரேசுவரர் பெரிய தேரிலும், மீனாட்சி அம்மன் சிறிய தேரிலும் எழுந்தருளினர். அப்போது திரண்டிருந்தவர்கள் பக்தி கோஷம் எழுப்பினர். தேரோட்டம் தொடங்குவதற்கு முன்பு அங்குள்ள கருப்பண சுவாமிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

காலை 5.05 மணிக்கு மேல் 5.29 மணிக்குள் மேஷ லக்கனத்தில் ரதாரோஹணம் நடைபெற்று காலை 6.30 மணிக்கு முதலில் சுவாமி தேரையும், தொடர்ந்து அம்மன் தேரையும் பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர்.

மாசி வீதிகளில் ஆடி அசைந்து வந்த மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருத்தேரின் முன்பாக ஏராளமான சிவ பக்தர்கள் கைலாய வாத்தியங்களை முழங்கியபடியும், பல்வேறு இசைகளை இசைத்தபடியும் மீனாட்சி சுந்தரேசுவரர் பதிகம் பாடியபடியும், ஹர ஹர சிவா என பக்தி முழக்கம் விண்ணைப்பிளக்க பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து சென்று சாமி தரிசனம் செய்தனர். 4 மாசி வீதிகளிலும் தேர்கள் அசைந்தாடி சென்றதை பொது மக்கள் சாலையின் இருபுறமும் உள்ள உயர்ந்த கட்டிடங்களில் நின்றும் தரிசனம் செய்தனர். சுவாமிஅம்மன் தேருக்கு முன்பு அலங்கரிக்கப்பட்ட யானை அழைத்துச் செல்லப்பட்டது.

அதன் பிறகு விநாயகர், முருகன், நாயன்மார்கள் தனித்தனி சிறிய சப்பரங்களில் சென்றனர். மாசி வீதிகளை வலம் வந்த தேர்கள் மதியம் நிலையை வந்தடைந்தன. அதன் பிறகு சண்டிகேஸ்வரர் வீதி உலா நடைபெற்றது.

தேரோட்ட விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றதால் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். திருவிழாவை காணவந்த பக்தர்கள் தங்களது வாகனங்களை நிறுத்துவதற்கு தனி இடவசதி செய்யப்பட்டிருந்தது. மக்கள் சிரமமின்றி தரிசனம் செய்ய வசதியாக போக்குவரத்தில் போலீசார் மாற்றங்கள் செய்து அதனை செயல்படுத்தினர்.

தேரோட்டத்தை தொடர்ந்து இன்று மாலையில் மீனாட்சி அம்மன், பிரியாவிடை சுந்தரேசுவரர் சப்தாவர்ண சப்பரத்தில் மாசி வீதிகளை வலம் வருகின்றனர். நாளை (10ந் தேதி) உச்சிக் காலத்தில் பொற்றாமரை குளத்தில் தீர்த்த திருவிழா நடக்கிறது. இரவு 10.15 மணிக்கு திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமியும், பவளக்கனிவாய் பெருமாளும் 16 கால் மண்டபத்தில் இருந்து விடை பெற்றுச் செல்கின்றனர். இந்த நிகழ்ச்சியோடு மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா நிறைவு பெறுகிறது.

சித்திரை திருவிழாவின் முத்திரை நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சிக்காக அழகர் கோவிலில் இருந்து கள்ளழகர் வேடத்தில் சுந்தரராஜபெருமாள் கண்டாங்கி பட்டுடுத்தி நாளை தங்கப் பல்லக்கில் புறப்படுகிறார்.

நாளை மறுநாள் (11ந் தேதி) மதுரை நோக்கி வரும் அழகரை வழியெங்கிலும் அமைக்கப்பட்டுள்ள மண்டகப்படிகளில் பக்தர்கள் திரண்டு வரவேற்கிறார்கள். மதுரையில் மூன்றுமாவடியில் நாளை மறுநாள் காலை 6 மணிக்கு எதிர்சேவை நிகழ்ச்சி நடைபெறுகிறது. மூன்று மாவடியில் சர்க்கரை கிண்ணத்தில் தீபம் ஏற்றியும் சிறப்பு தீபாராதனை காட்டியும் அழகரை மதுரை மக்கள் வரவேற்க உள்ளனர்.

இதைத்தொடர்ந்து அன்று இரவு தல்லாகுளத்தில் உள்ள பிரசன்ன வெங்கடாஜலபதி கோவிலில் அழகர் தங்குகிறார். அங்கு அவர் திருமஞ்சனம் கொள்கிறார். அங்கு அவருக்கு சிறப்பு ஆராதனைகள் நடைபெறுகின்றன.

12ந்தேதி காலை தங்க குதிரை வாகனத்தில் ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையை அணிந்து மக்களுக்கு அருள் பாலிக்கிறார். அதன்பின் தங்கக்குதிரை வாகனத்தில் புறப்பாடாகி ஆயிரம் பொன் சப்பரத்தில் அதிகாலை 3.30 மணி அளவில் எழுந்தருள்கிறார். பின்னர் சித்ரா பவுர்ணமி தினத்தன்று முக்கிய நிகழ்வான வைகை ஆற்றில் தங்க குதிரை வாகனத்தில் கள்ளழகர் இறங்கும் வைபவம் நடைபெறுகிறது.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● வெள்ளி ● மே 9, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# தையல் வாழ்வாதார தொகுப்பு ஆட்சியர் துவக்கி வைத்தார்



தென்காசி, மே 9-

தென்காசி மாவட்டம் குருவிகுளம் வட்டாரம் கே.ஆலங்குளம் ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களை கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தையல் வாழ்வாதார தொகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் கமல் கிஷோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

தென்காசி மாவட்டம் குருவிகுளம் வட்டாரம் கே.ஆலங்குளம் ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களை கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தையல் வாழ்வாதார தொகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் கமல் கிஷோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தென்காசி மாவட்டம் குருவிகுளம் வட்டாரம் கே.ஆலங்குளம் ஊராட்சியில் மகளிர் திட்டம் மூலம் தையல் பயிற்சி முடித்த 15 மகளிர் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்களை ஒருங்கிணைத்து தையல் வாழ்வாதார தொகுப்பு அமைக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பிற்கு கவனம் சார்ந்த வட்டார வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ. 5 இலட்சம் மதிப்பிலான தையல் இயந்திரங்கள், எம்பிராய்டரி இயந்திரங்கள், சோலார் இன்வெர்ட்டர் – பேனல், இஸ்திரி பெட்டி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. இந்த வாழ்வாதார தொகுப்பின் மூலம் ஆயத்த ஆடைகள், நைட்டிகள், பை வகைகள் ஆகியவை தயாரிக்கப்பட்டு தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பின் மூலம் தையல் தொழிலில் ஈடுபட்டு வரும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்களும் நாளொன்றுக்கு ரூ. 500 வரை கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. இது அவர்களது குழந்தைகளின் கல்வி செலவு, அவசர கால மருத்துவ உதவிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். மேலும், இக்குழுவினர் பல நிறுவனங்களிடம் கலந்து பேசி சந்தை வாய்ப்பினை அதிகப்படுத்தி பொருளாதாரத்தை ஈட்டி வாழ்வில் முன்னேற வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் மதி இந்திரா ப்ரியதர்ஷினி, குருவிகுளம் வட்டார ஒன்றிய தலைவர் விஜயலெட்சுமி, உதவி திட்ட அலுவலர்கள் காமராஜ், மாரீஸ்வரன், வாழ்வாதார இயக்க பணியாளர்கள் ராமச்சந்திரன், தனராஜ், காளிச்சாமி, வசந்தி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பவானிசாகர் பேரூராட்சி பகுதியில் வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு



ஈரோடு, மே 9-

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் பவானிசாகர் பேரூராட்சிக்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர், சத்தியமங்கலம் வட்டம், கேசர்காடன் பகுதியில் எஸ்.தீபா என்பவர் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் திட்டத்தின் கீழ் சிறுதானியங்களை முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள் அமைக்க மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.25 லட்சத்தில் 75 சதவீதம் மானியம் (அ) அதிகபட்சமாக ரூ.18.75 லட்சம் மதிப்பீட்டில் மானியத்துடன் கடனுதவி பெற்று வீட்டா மில்லட்ஸ் என்ற நிறுவனத்தினை நடத்தி வருவதைத் தொடர்ந்து, மேற்படி நிறுவனத்தினை செயல்பாடுகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, ஆலோசனைகள் வழங்கினார்.

தொடர்ந்து, பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி உப்புப்பள்ளம் கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில் நபார்டு வங்கியின் கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் சத்தி கொத்தமங்கலம் சாலை முதல் உப்புப்பள்ளம் சாலை வரை சாலை பலப்படுத்தும் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டு, உயரம் மற்றும் நீளத்தினை அளவீடு செய்து ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் இக்கரைத்தத்தப்பள்ளி கிராமம் பவானிநகர் குடியிருப்பு பகுதியில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் 480 அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு, மேலும் குடிநீர் வசதி, மின்சார வசதி குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, பவானிசாகர் பேரூராட்சியில் ரூ.6.92 கோடி மதிப்பீட்டில் இலங்கை தமிழ் அகதிகள் முகாமில் 120 வீடுகள் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பவானிசாகர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீரில் அழுத்தம் எவ்வளவு உள்ளது என்பதையும், கடைசி இணைப்பு வரை ஒரே அழுத்தத்தில் குடிநீர் வழங்கப்படுகிறதா என்பதையும் கேட்டறிந்து, அழுத்தமானி மூலம் குடிநீரில் அழுத்தத்தினை ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, புங்கர் ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கீழ் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழுவினரின் மதி அங்காடியின் கட்டுமானப்பணிகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, உரிய காலத்திற்குள் பணிகளை முடித்து, பயன்பாட்டிற்கு வழங்கிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் தங்கும் விடுதிகள், வகுப்பறைகள், கணினிகளுடன் கூடிய ஆய்வகம், நூலகம், உள் விளையாட்டு அரங்கம், கலையரங்கம், பல்நோக்கு அரங்கம், நவீன உணவு கூடங்கள், சமையல் கூடம் ஆகியவற்றை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பயிற்சி பெறும் அலுவலர்களிடம் பயிற்சியினை முழுமையாக பெற்று, பணிகளை மேலும் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், அங்குள்ள நூலகத்தில் ஆய்வு மேற்கொண்டு, 5000க்கும் மேற்பட்ட அரசாணைகள் பராமரிக்கப்பட்டு வருவது குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வுகளின்போது, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) (பொ) வரதராஜன், பவானிசாகர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயலட்சுமி, பிரகாஷ், சத்தியமங்கலம் வட்டாட்சியர் ஜமுனாதேவி, வேளாண்மைத் துறை துணை இயக்குநர் நிர்மலா உட்பட வேளாண் அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# புதுச்சேரி கம்பன் கழகத்தின் 58ம் ஆண்டு கம்பன் விழா துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் விழாவை தொடங்கி வைத்தார்




புதுச்சேரி, மே 9-

புதுச்சேரி கம்பன் கழகத்தின் 58ம் ஆண்டு கம்பன் விழா இன்று தொடங்கியது. துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் விழாவை தொடங்கிவைத்தார். முதலமைச்சர் ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமிநாராயணன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் சாய் ஜெ. சரவணன் குமார், மாநிலங்களவை உறுப்பினர் செல்வகணபதி, சட்டமன்ற உறுப்பினர் அனிபால் கென்னடி, ராமலிங்கம், கம்பன் கழக செயலர் சிவகொழுந்து ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

விழாவில், கம்பன் விழா மலரை சட்டப்பேரவை தலைவர் செல்வம், வெளியிட்டு சிறந்த தமிழ் புலவர்களுக்கான இணை பரிசுகளை வழங்கினார்.

மேலும், கம்பன் ஆய்வு நூலை உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் வெளியிட, கம்பன் கழகம் சார்பில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பேச்சு, கவிதை, கட்டுரை போட்டிகளில் பரிசுகள் வென்ற மாணவ மாணவிகளுக்கு ரொக்க பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. அதோடு, கம்பன் கழக புதிய வாழ்நாள் உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டனர். முன்னதாக, கம்பவாணர் அருணகிரியார் உருவப்படத்திற்கு துணைநிலை ஆளுநர் மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார்.

# வீரசக்தேவி கோயிலில் 69வது ஆண்டு விழா



கயத்தாறு, மே 9-

கயத்தாறில் பாஞ்சாலங்குறிச்சியில் நடைபெறும் வீரபாண்டிய கட்டபொம்மன் குலதெய்வமான வீரசக்தேவி ஆலய திருவிழா 69வது ஆண்டு விழாவை முன்னிட்டு, கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் இருந்து 41வது ஆண்டு தொடர்ஜீவஜோதி தொடர் ஓட்டம், இந்த தொடர் ஓட்டத்திற்கு பாஞ்சாலங்குறிச்சியில் இருந்து நூற்றிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வந்து மணிமண்டபத்திலுள்ள அவரது சிலைக்கும் மற்றும் தூக்கிலிடப்பட்ட இடத்தில் இருக்கும் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்திவிட்டு வீர விளையாட்டுகள் சிலம்பாட்டம் சுருள்வாள், உள் பட பல்வேறு வீரவிளையாட்டுகளுடன், அங்கு இருந்து ஜீவஜோதி ஓட்டத்தை முன்னாள் செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சரும் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கடம்பூர் செ.ராஜ் வீர வாள் வழங்கியும் ஜோதியை வழங்கி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கயத்தாறு மேற்கு ஒன்றிய செயலாளர் செல்வகுமார், சாலைகருப்பசாமி பாண்டியன், மாவட்ட கலைப் பிரிவு செயலாளர் நவநீதகிருஷ்ணன், மாவட்ட சிறுபான்மை பிரிவு இணை செயலாளர் பசீர், முன்னாள் பேரூராட்சி துணை தலைவர் முருகேசன், ஜெயலலிதா பேரவை நகர செயலாளர் இந்த ஜோதி ஓட்டத்திற்கான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை கோவில்பட்டி டி.எஸ்.பி.ஜெகநாதன் தலைமையில் கயத்தாறு இன்ஸ்பெக்டர் சுதாதேவி, கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மற்றும் சப்இன்ஸ்பெக்டர் ஆர்தர்ஜஸ்டின் சாமுவேல், சேர்மராஜ், மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு ஈடுபட்டனர். இந்த ஜோதி ஓட்டத்திற்கு இளைஞர் அணியினர்தலைவர் சதீஷ்குமார், செயலாளர் முத்தமிழ்செல்வம், பொருளாளர் பொன்ராஜ், இளைஞர் அணி துணை தலைவர் விஜய், துணை செயலாளர் துரைமுருகன், பாலமுருகன் ஆகியோர் தலைமையில் கயத்தாறில் இருந்து மேள தாளத்துடன் வழிநெடுக கடம்பூர், பசுவந்தனை, கீழமுடிமன், ஒட்டப்பிடாரம் உள்பட இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் வழியாக சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தூரம் ஜீவஜோதி எடுத்து ஓடிச் செல்கின்றனர். இந்த நிகழ்ச்சியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிழக்கு ஒன்றிய செயலாளர் சிவ பாண்டியன், ஒன்றிய துணை அமைப்பாளர் முத்துப்பாண்டியன், கயத்தார் நகர செயலாளர் வேலுச்சாமி என்ற முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் இளைஞர் அணியினர் செய்து வருகின்றனர்.

# விழுப்புரம் மாவட்டத்தில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 20,526 மாணவ, மாணவிகள் தேர்ச்சி: மாவட்ட ஆட்சியர் தகவல்



விழுப்புரம், மே 9-

தமிழ்நாடு முழுவதும் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு முடிவு வெளியானதை தொடர்ந்து, விழுப்புரம் மாவட்டத்தில், 20,526 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்று மாநில அளவில் 18வது இடம் கிடைக்கப்பெற்றுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தெரிவித்துள்ளார்.

12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு முடிவு வெளியானதை தொடர்ந்து. விழுப்புரம் மாவட்ட தேர்ச்சி அறிக்கையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் நேற்று வெளியிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில் 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு முடிவு வெளியிடப்பட்டது விழுப்புரம் மாவட்டத்தில் 10,533 மாணவர்களும், 11,048 மாணவியர்கள் என மொத்தம் 21,581 மாணவ, மாணவியர்கள் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வினை எழுதினார்கள். இதில், 9,351 மாணவர்களும், 10,675 மாணவியர்கள் என மொத்தம் 20,526 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி , பெற்றுள்ளார்கள். இதில் 93.53 சதவீதம் மாணவர்களும், 96.62 சதவீதம் மாணவியர்கள் . என மொத்தம் 95.11 சதவீதம் தேர்ச்சி விழுக்காடு கிடைக்கப்பெற்றுள்ளது.

# அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மேம்படுத்தப்பட்ட கணினி ஆய்வகங்கள் திறப்பு விழா




**சிதம்பரம், மே 9-**

அண்ணாமலைப் பல்கலைக்கழக பொறியியல் புலத்திலுள்ள கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் மேம்படுத்தப்பட்ட கணினி ஆய்வகங்களுக்கான திறப்பு விழா கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையின் தலைவர் முனைவர் பவானி தலைமையில், பொறியியல் புலமுதல்வர் முனைவர் கார்த்திகேயன் மற்றும் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் பிரகாஷ் முன்னிலையில், பல்கலைக்கழக துணைவேந்தர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் முனைவ அருட்செல்வி மாணவர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, அவரது வாழ்த்துரையில் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையின் முன்னாள் மாணவரும் (1989-1993Batch)மற்றும் REUTTER நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான கோபி நிறுவன சமூகப் பொறுப்பு நிதியில், கணினி வரைகலை பல்லூடக ஆய்வகம் மற்றும் தரவுத்தள மேலாண்மை அமைப்பு ஆய்வகம் என இரண்டு ஆய்வகங்களை ரூ.20.64 இலட்சம் செலவில் ஒரு சர்வர் உடன் 68 நோட்ஸ்களைக் கொண்டு மேம்படுத்தி வழங்கியுள்ளார். மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பொறியியல் புலமாணவர்களுக்காக கணினி நிரலாக்க மொழி ஆய்வகத்தை ரூ.21 இலட்சம் செலவில் ஒரு சர்வர் மற்றும் 72 நோட்ஸ்களைக் கொண்டு மேம்படுத்தி வழங்கினார் என்பதை குறிப்பிட்டு வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார். மேலும்பல்கலைக்கழக வளர்ச்சி மற்றும் பயிலும் மாணவர்களின் வேலைவாய்ப்புகளில் முன்னாள் மாணவர்களின் பங்களிப்பை பாராட்டினார். துறைத்தலைவர் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து அனைவரையும் வரவேற்று நன்றிகளை தெரிவித்துக்கொண்டார்.

# +2 பொதுத்தேர்வில் விழுப்புரம் ஜெயேந்திர பள்ளி மாணவி மாவட்டத்தில் முதலிடம்-ஆட்சியர் பாராட்டு



**விழுப்புரம், மே 9-**

விழுப்புரம் ஜெயேந்திர பள்ளியைச் சேர்ந்த ஹேமாதேவி, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 600க்கு 596 மதிப்பெண்கள் பெற்று, மாவட்டத்தில் முதலிடம் பிடித்து பெரும் சாதனை புரிந்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, மாவட்ட முதலிடம் பெற்ற ஹேமாதேவியை, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான் நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்தார். இந்நிகழ்வில் பள்ளித் தாளாளர் பிரகாஷ், பள்ளிச் செயலாளர் ஜனார்த்தனன் மற்றும் முதல்வர்கள் பங்கேற்றனர்.

மேலும் தரணி மற்றும் ராகவி 600 க்கு 594 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் மூன்றாம் இடமும் பள்ளி அளவில் இரண்டாம் இடமும், ரூபிகா மற்றும் புவிசா லட்சுமி 600 க்கு 592 மதிப்பெண்கள் பெற்று பள்ளி அளவில் மூன்றாம் இடம் பிடித்தனர்.

மேலும், ஜெயேந்திர பள்ளி கடந்த 18 ஆண்டுகளாக தொடர்ந்து 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெறுவது குறிப்பிடத்தக்கது. தொடர்ச்சியாக மாவட்ட அளவில் மூன்று வருடங்களாக 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலிடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

### உலக ரெட்கிராஸ் தினத்தை முன்னிட்டு

# ஒட்டன்சத்திரத்தில் விழிப்புணர்வு விளையாட்டு போட்டி



**ஒட்டன்சத்திரம், மே 9-**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் உலக ரெட்கிராஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு, விளையாட்டு போட்டி மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு இந்திய மருத்துவ கழக ஒட்டன்சத்திரம் கிளை செயலாளரும், ஒட்டன்சத்திரம் தலைமை மருத்துவமனை முன்னாள் மருத்துவ அலுவலருமான டாக்டர் ஏ.ஆசைத்தம்பி தலைமை வகித்தார். இதில் பட்ஸ் பள்ளி கல்வி குழுமம் தாளாளர் பொன். கார்த்திக் முன்னிலை வகித்தார். வருகை தந்த அனைவரையும் சன் செட்டில் கிளப் ஒருங்கிணைப்பாளர் ஜெயக்குமார் வரவேற்று பேசினார்.

இவ்விழாவில் திண்டுக்கல் மாவட்ட இந்திய ரெட்கிராஸ் சொசைட்டி செயற்குழு உறுப்பினர் டி.ஹெரால்டு ஜாக்சன் கலந்துகொண்டு உலக ரெட் கிராஸ் சொசைட்டியின் இந்த வருட குறிக்கோளான 'மனித நேயத்தை உயிருடன் வைத்திருத்தல்" பற்றி விளையாட்டு வீரர்கள் மத்தியில் விழிப்புணர்வு கருத்துரை வழங்கினார். இரட்டையர் இறகு பந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இந்திய ரெட்கிராஸ் சொசைட்டி சார்பாக பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும் இவ்விழாவில் கூட்டுறவு துறை முன்னாள் துணைப் பதிவாளர் டேனியல், ஜவ்வாதுபட்டி யூனியன் வங்கி துணை மேலாளர் சரத், ஆசிரியர் சௌந்தரராஜன், இந்திய ஆயுள்காப்பீட்டு கழக மூத்த ஆலோசகர் கனகராஜ் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். முடிவில் ஓடைப்பட்டி கூட்டுறவு வங்கி செயலாளர் கணேஷ்குமார் நன்றி கூறினார்.

# அருள்மிகு அவிநாசி லிங்கேஸ்வரர் கோயில் தேரை வடம் பிடித்து அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், அருள்மிகு அவிநாசி லிங்கேஸ்வரர் திருக்கோவில் தேர்திருவிழாவினை முன்னிட்டு தேரை வடம்பிடித்து தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஸ் அசோக், அறங்காவலர் குழுத்தலைவர் (அருள்மிகு அவிநாசி லிங்கேஸ்வரர் திருக்கோவில்) சக்திவேல் ஆகியோர் உள்ளனர்.

# சேலம் விநாயகா மிஷன் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி பேராசிரியருக்கு மாநில அளவிலான கருத்தரங்கில் முதல் பரிசு



**சேலம், மே 9-**

இந்திய கதிரியக்கவியல் மற்றும் தொழில்நுட் பவியலாளர் சங்கமானது ஆண்டுதோறும் கதிரியக்கவியல் துறை சார்ந்த மாநில அளவிலான கருத்தரங்குகளை இந்தியா முழுவதிலும் உள்ள பல்வேறு மாநிலங்களில் நடத்தி வருகிறது. இதனை முன்னிட்டு சமீபத்தில் கேரளாவில் உள்ள கோட்டயத்தில் மாநில அளவிலான கருத்தரங்கை நடத்தியது. இதில் விநாயகா மிஷனின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் கதிரியக்கவியல் துறையை சேர்ந்த உதவி பேராசிரியர்கள் அல்போன்ஸ் மற்றும் ஆண்டனி காட்சன் மற்றும் மாணவர்கள் கல்லூரியின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் வழிகாட்டுதலின்படி பங்கேற்று ஆராய்ச்சி கட்டுரை சமர்ப்பித்தல் மற்றும் படவிளக்க காட்சி போட்டி போன்றவற்றில் பங்கேற்றனர்.

இதில் பேராசிரியர்களுக்கான பிரிவில் ஆராய்ச்சி கட்டுரை சார்ந்த கருத்துரையாற்றல் நிகழ்வில் உதவி பேராசிரியர் அல்போன்ஸ் அவர்களுக்கு முதல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. மேலும் துறையின் மாணவர்களும் இந்நிகழ்வில் சிறப்பாக பங்கேற்று படவிளக்காட்சி மற்றும் ஆராய்ச்சி கட்டுரை சமர்ப்பித்தல் போன்ற போட்டிகளில் திறம்பட செயலாற்றியதை முன்னிட்டு பாராட்டுச் சான்றிதழையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய மாநில அளவிலான தேசிய கருத்தரங்கில் பங்கேற்று முதல் பரிசினையும் சிறப்பு பாராட்டு சான்றிதழினையும் பெற்ற மாணவர்களுக்கும் உதவி பேராசிரியர்களுக்கும் கல்லூரியின் டீன் தனது வாழ்த்தினையும் பாராட்டினையும் தெரிவித்தார்.

# வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைக்கு ஆட்சியர் மாலை அணிவித்து மரியாதை



தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் மகாலட்சுமி, ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் ஆனந்த் உள்ளனர்.

## 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் ஊத்தங்கரை வித்யா விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி 100% தேர்ச்சி







கிருஷ்ணகிரி, மே 9-

2024 –2025 கல்வியாண்டின் பன்னிரெண்டாம் வகுப்பு பொது தேர்வில் ஊத்தங்கரை வித்யா விகாஸ் பள்ளி மாணவர்கள் 100 சதவிகிதம் தேர்ச்சிப் பெற்று பெருமை சேர்த்துள்ளனர். மேலும் அனைத்து மாணவர்களும் முதல் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. நம் பள்ளியின் முதல் மதிப்பெண் 581/600 எடுத்த இரா. தமிழ்கிருஷ்ணன் மாணவனை பள்ளியின் தாளாளர், முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் பள்ளியின் நிர்வாகத்தினர் அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

பள்ளியின் சாதனை மாணவர்களின்விவரம்–மதிப்பெண் –முதல் மதிப்பெண் 581/600 இரா. தமிழ்கிருஷ்ணன், இரண்டாம் மதிப்பெண் 578/600 அ.பிரசன்னா, மூன்றாம் மதிப்பெண் 577/600 ந.தர்ஷினி.

பள்ளி மாணவர்களின் மதிப்பெண் விவரம்–550க்கு மேல் 17 பேர், 500க்கு மேல் 61 பேர் எடுத்து நமது பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

## +2 பொதுத்தேர்வில் ஒட்டன்சத்திரம் கொசவபட்டி அக்சயா அகாடமி பள்ளி 100சதவீதம் தேர்ச்சி பெற்று சாதனை

ஒட்டன்சத்திரம், மே 9-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகே உள்ள கொசவபட்டி அக்சயா அகாடமி பள்ளி 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளது. மேலும் பள்ளியில் வேலூர் பெ.சந்தோஷ் மற்றும் கந்தப்பகவுண்டன் வலசு கி.ராகுல் ஆகியோர் 600 மதிப்பெண்களுக்கு 588 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலிடம் பிடித்துள்ளனர்.

அக்சயா அகாடமி பள்ளியில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் சின்ன மண்டவாடி ர.தனுஷ் 580 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடமும், காப்பிளியபட்டி க.சாய்தாரணி 573 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடமும் பெற்றுள்ளனர். மேலும்பள்ளியில் 588 மதிப்பெண்கள் பெற்று 2 பேரும், 580 மதிப்பெண்களுக்கு மேல் 3 பேரும், 570 மதிப்பெண்களுக்கு மேல் 4 பேரும், 550 மதிப்பெண்களுக்கு மேல் 14 பேரும், 530 மதிப்பெண்களுக்கு மேல் 31 பேரும், 500 மதிப்பெண்களுக்கு மேல் 61 பேரும், 450 மதிப்பெண்களுக்கு மேலும் மிமிமி பேரும், 400 மதிப்பெண்களுக்கு மேல் 143 பேரும் கூடுதல் மதிப்பெண்களை பெற்று வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

பள்ளியில் இயற்பியல் பாடத்தில் 2 பேரும், கணினி அறிவியல் பாடத்தில் 3 பேரும், கணினி பயன்பாடு பாடத்தில் ஒருவரும், வேதியியல் பாடத்தில் ஒருவரும், கணிதம் பாடத்தில் ஒருவரும், உயிரியல் பாடத்தில் ஒருவரும் 100 மதிப்பெண்களுக்கு 100 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர். 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றவர்களுக்கும், 2ம் மதிப்பெண், 3ம் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கும் மற்றும் கூடுதல் மதிப்பெண்கள் பெற்று 100க்கு 100 தேர்ச்சி பெற்று சாதனை படைத்த அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் ஊக்குவித்த பள்ளி இருபால் ஆசிரிய பெருமக்களுக்கும், பெற்றோர்களுக்கும், ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைத்து தரப்பு பிரமுகர்களுக்கும் பள்ளியின் தாளாளர் கா.மலர்விழிச்செல்வி நாச்சிமுத்து, முதல்வர் கே.செந்தில் மற்றும் பள்ளி நிர்வாகத்தினர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

## காரைக்காலில் மீனவக் கிராமங்களில் பைபர் படகுகளை மீன்வளத் துறையின் சிறப்புக் குழுக்கள் கணக்கெடுப்பு



காரைக்கால், மே 9-

காரைக்காலில் மீனவக் கிராமங்களில் உள்ள பைபர் படகுகளை, மீன்வளத் துறையின் சிறப்புக் குழுக்கள் நேற்று கணக்கெடுப்பு நடத்தியது.

காரைக்கால் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் மற்றும் படகு பதிவாளர் கோவிந்தசாமி, இது குறித்து நிருபர்களிடம் நேற்று கூறியதாவது: இந்திய அரசின் மீன்வள அமைச்சகத்தின் இயக்குநர் கடிதத்தின் படி, அனைத்து கடலோர பகுதி மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தற்பொழுது நடைமுறையிலுள்ள 2025 ஆண்டுக்கான மீன்பிடி தடை காலத்திற்குள் அனைத்து பதிவு பெற்ற / பதிவு பெறாத மீன்பிடி பைபர் படகுகளையும் கள ஆய்வு செய்து, அதற்கேற்றாற்போல் இணையதள பக்கத்தை புதுப்பித்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தது. இத்தகவல் முறைப்படி காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 11 மீனவர் கிராம பஞ்சாயத்தார்க்கும் அறிவிப்பு செய்திருந்தோம். அதன்படி நேற்று, அனைத்து மீனவ கிராமங்களை சேர்ந்த பஞ் சாயத்தார், மீனவ கூட்டுறவு சங்கத்தின் ஒத்துழைப்போடு படகுகளை கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதற்காக மீன்வளத்துறை அலுவலர்கள் அடங்கிய சிறப்பு குழு அமைக்கப்பட்டு கணக்கெடுக்கும் பணி நடைபெற்றது. இப்பணியை மேற்கொள்ள காரைக்கால் மீன்வளத்துறை அதிகாரிகள் மட்டுமின்றி புதுவையில் இருந்தும் மீன்வளத்துறை அதிகாரிகள் வந்திருந்தனர். இவர்கள் அனைவரும் 14 குழுக்களாக பிரிந்து மீன்வ கிராமங்களில் நேற்றைய தினம் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த சிறப்பு குழுக்கள் மண்டபத்துர் முதல் வடக்கு வாஞ்சூர் வரையிலான மீனவ கிராமங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத படகுகளை அந்தந்த ஊரில் நேற்று ஒரே நாளில் ஆய்வு செய்தனர். இந்த கள ஆய்வின் பொழுது சம்பந்தப்பட்ட பைபர் படகு உரிமையாளர்கள் உடனிருந்து தங்களது படகுகளை ஆய்வுக்கு உட்படுத்தினர். 11 மீனவ கிராமங்கள் மட்டுமின்றி காரைக்கால் அரசலாற்றில் நிறுத்தப்பட்டிருந்த ஃபைபர் படகுகளும் இக்குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டது.

முக்கியமாக நேற்றைய தினம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட படகுகள் மட்டுமே இனி வரும் காலங்களில் பதிவு செய்யப்பட்ட படகுகளாக நீடிக்கும். இந்த கள ஆய்வின் பொழுது காண்பிக்கப்படாத படகுகள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவு நீக்கம் செய்யப்படும். நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட இப்பணியின் போது, மீன்வளத்துறை கண்காணிப்பாளர் தேவலட்சுமி மற்றும் பலர் உடன் இருந்தனர். கணக்கெடுப்பின் நிறைவில் சுமார் 800 படகுகள் கணக்கெட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

## செஞ்சி பேரூராட்சி வி.பி.என். நகரில் ரூ.9.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய பேவர் பிளாக் சாலை

### செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்



செஞ்சி, மே 9–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி 3 வது வார்டு வி.பி.என் நகர் 4வதுகுறுக்குத் தெருவில் புதிய பேவர் பிளாக் சாலை அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இக்கோரிக்கையினை ஏற்று 15வது மானிய நிதி குழு திட்டத்தின் கீழ் 9 லட்சத்தி 50ஆயிரம் மதிப்பீட்டில் புதிய பேவர் பிளாக்சாலை அமைப்பதற்கு பூமிபூஜை விழா நடைபெற்றது.

செஞ்சிபேரூராட்சிமன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற கவுன்சிலர் அஞ்சலை நெடுஞ்செழியன் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும்செஞ்சிதொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதிய பேவர் பிளாக்சாலை அமைப்பதற்கு பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.


இதில் செஞ்சி நகர செயலாளர் கார்த்திக், பொருளாளர் நெடுஞ் செழியன், பேரூராட்சி மன்ற கவுன்சிலர், மகாலட்சுமி கமலநாதன், முன்னாள் கவுன்சிலர் சீனிவாசன், நிர்வாகிகள் பொற்கொடி, தொ.மு.ச.அரி கிருஷ்ணன், தொண்டரணி பாஷா, பழனி, ஆனந்தன் துரை சீனிவாசன் மணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### டைட்டன் வேர்ல்ட் கோலாகலமாகக் கொண்டாடும் அன்னையர் தினம்

## டைட்டன் வேர்ல்ட் விற்பனை நிலையங்களில் உங்களுக்குப் பிடித்த பிரத்தியேக நறுமணமுள்ள திரவியம் நேரடியாக தயாரிக்கும் வாய்ப்பு

கோவை, மே 9–

நம்முடைய நினைவுகளை மீண்டும் எழச்செய்யும் ஆற்றல் கொண்ட ஒன்றாக முக்கியத்துவம் பெற்றவை நறுமணமளிக்கும் திரவியகள். இன்றும் கூட நம்மில் பலருக்கு. தாயின் வாசம் ஒருவிதமான அன்பையும், அரவணைப்பையும், பாதுகாப்பையும் நினைவுப்படுத்தும் ஒன்றாகவே இருந்து வருகிறது. இந்த அன்னையர் தினத்தில், உங்கள் அம்மா எப்போதும் நினைவு கூர்ந்து சந்தோஷப்படும் வகையிலான பரிசை அளிப்பதன் மூலம் தாயுடனான பாசப்பிணைப்பை கௌரவித்து கொண்டாட டைட்டன் வேர்ல்ட் வரவேற்கிறது. அம்மாவின் நேசத்தைப் போலவே காலம் தாண்டியும் நறுமணமாகத் திகழும் பரிசு இது. நீங்கள்



டைட்டன் வேர்ல்ட் விற்பனை நிலையங்களில் உங்களது ரசனைக்கு ஏற்ற நறுமணத்தில் நறுமண திரவியத்தை அங்கேயே உருவாக்கிடும் இன் ஸ்டோர் அனுபவமாக இருக்கும் வகையில் இந்த வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மே மாதம் 10 மற்றும் 11ம் தேதிகளில் இந்தியா முழுவதிலும் உள்ள 163 டைட்டன் வேர்ல்ட் விற்பனை நிலையங்களில், உங்களது தனிப்பட்ட விருப்பத்திற்கேற்ற வகையில் பிரத்தியேகமாக நறுமணத் திரவத் தயாரிப்பில் வாடிக்கையாளர்கள் பங்கேற்கலாம். அன்னையர் தினத்தைக் கொண்டாடும் விதமாக தங்களது அம்மாவை முன்னிலைப்படுத்தியோ அல்லது அவருடன் சேர்ந்தோ, அம்மாவை ஆச்சரியப்படுத்தும் வகையில் நறுமண திரவியங்களை தங்கள் கையாலேயே தயாரிக்கும் வாய்ப்பினை டைட்டன் வேர்ல்ட் வழங்குகிறது. டைட்டன் வேர்ல்ட் விற்பனை நிலையங்களிலேயே நறுமண திரவியம் உருவாக்கும் பிரத்தியேக நறுமண திரவிய தயாரிப்பு நிகழ்ச்சி குறித்துப் பேசிய டைட்டன் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் வாட்ச் – வியரபிள்ஸ் பிரிவின் துணைத் தலைவர் மற்றும் தலைமை விற்பனை மற்றும் சந்தைப்பிரிவு அதிகாரியான ராகுல் சுக்லா பேசும்போது, “டைட்டன் நிறுவனத்தில் நம்மிடையே இருக்கும் உறவுகளைக் கொண்டாடுவதில் நாங்கள் எப்போதும் முக்கியத்துவம் அளித்து வருகிறோம். அங்கேயுள்ள நறுமணம் கலவை நிபுணர் வாடிக்கையாளர்கள் தங்களுக்கென்று உருவாக்கும் நறுமணத் திரவித்தைக் கலப்பது எப்படி என்பது குறித்த ஆலோசனைகளை வழங்குவார். ஒவ்வொரு நறுமண எண்ணெயின் பண்பைப் புரிந்துகொண்டு, தங்களுக்கு பிடித்த நறுமணமுள்ளவற்றை கலந்து தனித்துவமான நறுமண திரவியத்தை உருவாக்குவதற்கு உதவி செய்வார். வாடிக்கையாளர்கள் தங்கள் தாய்க்கென்று உருவாக்கிய நறுமணத் திரவத்தை அதற்கேயுரிய அழகிய குப்பியில் எடுத்து செல்லல்லாம். டைட்டன் விற்பனை நிலையத்திற்குள் வருகைத்தந்து நறுமணம் கமழும் இந்த ஆச்சரிய அனுபவத்தைப் பெறுங்கள். கோவை க்ராஸ் கட் ரோடு மற்றும் ஆர்.எஸ்.புரம் ஆகிய பகுதிகளில் உள்ள டைட்டன் வேர்ல்ட் விற்பனை நிலையங்களில் இந்த அனுபவத்தை பெற்றிட வாருங்கள் என்றார்.

## +2 பொதுத்தேர்வில் பிவிபி பள்ளி மாணவி மாநிலத்தில் முதலிடம் பிடித்து சாதனை

திண்டுக்கல், மே 9-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில், BVB பள்ளி 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 600க்கு 599 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்த மாணவி ஓவியாஞ்சலி அவரது பள்ளி ஆசிரியர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். ஓவியாஞ்சலி மாநிலத்திலேயே முதலிடம் பிடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தேர்வு முடிவுகள் நேற்று வெளியான நிலையில், பழனி அருகே உள்ள BVB பள்ளியைச் சேர்ந்த மாணவி ஓவியாஞ்சலி 600க்கு 599 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இந்த அபாரமான சாதனையை அறிந்ததும், பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.

ஓவியாஞ்சலி பள்ளிக்கு வந்ததும், ஆசிரியர்கள் அவரை கட்டித் தழுவி தங்களது பாராட்டுகளை தெரிவித்தனர். பள்ளியின் நுழைவாயிலில் ஓவியாஞ் சலிக்கு பூங்கொத்து கொடுத்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆசிரியர்கள் மற்றும் சக



மாணவர்கள் ஓவியாஞ் சலியின் இந்த சாதனையை கொண்டாடினர்.

மாணவி ஓவியாஞ்சலி தனது இந்த வெற்றிக்கு பள்ளி ஆசிரியர்களின் வழிகாட்டுதலும், தனது கடின உழைப்புமே காரணம் என்று தெரிவித்தார். மேலும், தனது எதிர்கால கல்விக்கான இலக்குகளையும் அவர் பகிர்ந்து கொண்டார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் முதலிடம் பிடித்த மாணவி ஓவியாஞ் சலிக்கு பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்த சாதனை மற்ற மாணவர்களுக்கும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளது. பள்ளியின் தலைமை ஆசிரியர் ஓவியாஞ்சலிக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், மற்ற மாணவர்களும் ஓவியாஞ் சலியை முன்மாதிரியாகக் கொண்டு கடின முயற்சி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மாணவி ஓவியாஞ் சலியின் இந்த சிறப்பான வெற்றி, அவரது குடும்பத்தினருக்கும், பள்ளிக்கும் பெருமை சேர்த்துள்ளது. பழனி பகுதியில் இந்த செய்தி பரவியதும், பலரும் ஓவியாஞ்சலிக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

# மதுரை சித்திரை திருவிழா: மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாண உற்சவம்

மதுரை, மே 9-

உலக பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் 12 மாதங்களும் திருவிழா நடைபெறும். அதிலும் சித்திரை மாதம் நடைபெறும் திருவிழா பிரசித்தி பெற்ற திருவிழாவாக நடைபெறும். இந்தாண்டு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் சித்திரைதிருவிழா கடந்த ஏப்ரல் 29 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் அம்மனும் சுவாமியும் வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளி நான்கு மாசி வீதிகளிலும் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்துவருகின்றனர். விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளான 8ஆம் நாளில் மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம் நேற்று முன்தினமும், 9ஆம் நாள் நிகழ்வாக நேற்றிரவு இரவு திக் விஜயமும் நடைபெற்று முடிவடைந்தது



இந்நிலையில் சித்திரை திருவிழாவின் 10ஆம் நாள் நிகழ்வான விழாவின் சிகர நிகழ்ச்சியான மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணத்தை முன்னிட்டு சுவாமியும் அம்மனும் அதிகாலை அழகிரிசாமி நாயுடு, சூறாவளி சுப்பையா, கல்யாண சுந்தர முதலியார் மண்டகப்படிகளில் எழுந்தருளிய பின்னர் நான்கு சித்திரை வீதிகள் சுற்றி வலம் வந்தனர். அப்போது திருக்கல்யாண மேடையில் ஓதுவார்களால் பன்னிரு திருமுறைகள் ஓதப்பட்டது.

இதையடுத்து முத்துராமய்யர் மண்டபத்தில் சுவாமியும், அம்மனும் கன்னி ஊஞ்சலாடிய பின் கோவில் வடக்கு ஆடி, மேல ஆடி சந்திப்பில் நறுமணம் மிக்க வெட்டிவேர்கள் மற்றும் பலவகைவண்ணப்பூக்களாலும், பச்சரியாலும், நவதானியங்களாலும் அலங்கரிப்பட்ட திருக்கல்யாண மேடையில் மணக்கோலத்தில் மீனாட்சியம்மனும், சுந்தரேசுவரர் பிரியாவிடையுடனும் தனி தனியாக எழுந்தருளினர்.

முன்னதாக புதிருக்கல்யாண மேடையில் சுப்பிரமணியசுவாமி தெய்வானையுடனும் பின்னர் மீனாட்சியம்மனும் சுந்தேரசுவரரரும் மேடைக்கு வந்த பின்னர் பவளகனிவாய் பெருமாளும் வந்திருந்து மணமேடையில் எழுந்தருளினர்.

திருக்கல்யாண மேடையில் மீனாட்சியம்மனின் வலதுபுறம் பவளகனிவாய் பெருமாளும் சுந்தரேசுவரரின் இடது புறம் சுப்ரமணியசுவாமி தெய்வானையுடனும் எழுந்தருளினர். தொடர்ந்து விநாயகர் வழிபாடு உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் செய்யப்பட்ட பின்னர் பாலிகை இடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனையடுத்து சுவாமி மற்றும் அம்மனின் சார்பில் பிரதிநிதிகளான சிவாச்சாரியார்களுக்கு ரக்சாபந்தன் எனப்படும் காப்புகட்டிய பின்னர் மீனாட்சியம்மனுக்கும், சுந்தரேசுவரருக்கும் காப்புகட்டும் வைபவமும் அதனை தொடர்ந்து பல்வேறு பூஜைகளும் நடைபெற்றது. தொடர்ச்சியாக மீனாட்சியம்மனுக்கும், சுந்தரேஸ்வரருக்கும் மணப்பட்டு சாற்றும் நிகழ்வு நடைபெற்றதையடுத்து கோவில் சார்பில் சுந்தரேஸ்வரருக்கு பட்டு பீதாம்பரமும், அம்மனுக்கு பட்டுச்சேலைகளும் சாத்தப்பட்டது. இதனையடுத்து தனது தங்கையான மீனாட்சியம்மனை பவளகனிவாய் பெருமாள் தாரைவார்த்து கொடுக்கும் நிகழ்வும் நடைபெற்றது. தொடர்ந்து மீனாட்சியம்மன் சார்பிலும், சுந்தரேசுவரர் சார்பிலும் பிரதிநிதிகளாக இருந்து சிவாச்சாரியார்கள் மாலை மாற்றும் வைபவம் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து வேதமந்திரங்கள் முழங்க, ஹோமம் வளர்க்கப்பட்டு மங்கல வாத்தியங்கள் வாசிக்க வெகுவிமர்சையாக பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் மிதுன லக்கனத்தில் மீனாட்சியம்மனுக்கு வைரத்தால் ஆன மங்கல நாண் அணிவிக்கப்பட்டு திருக்கல்யாணம் 8.25 மணிக்கு மேல் 8.59 மணிக்குள் வெகுவிமர்சையாக, கோலகலமாக நடைபெற்றது.

அப்போது கோவிலில் கூடியுள்ள பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பக்தி கோசம் முழங்க மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் நடைபெற்றவுடன் பெண்கள் தங்களது மாங்கல்யத்தை புதுப்பித்துகொண்டனர்.

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாண நிகழ்வை தொடர்ந்து சுவாமிக்கும், அம்மனுக்கும் பல்வேறு தீப ஆராதனைகள் காட்டப்பட்டது. திருக்கல்யாணத்தின் போது மட்டுமே அம்மன் உற்சவத்திற்கு தங்க அங்கி அணிவிக்கப்படும், அப்போது 1823 ஆம் ஆண்டு முன்னோர்களால் மீனாட்சியம்மன் கோவிலுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட தீபாரதனை தட்டு மூலமாக அம்மனுக்கும் சுவாமிக்கும் தீபாரதனை காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து தங்கத்தால் ஆன 300 ஆண்டுகள் பழமைவாய்ந்த சந்தன கும்பா மற்றும் பன்னீர் தெளிப்பு கும்பா மூலமாக சுவாமிக்கும் அம்மனுக்கும் பன்னீர் தெளிக்கப்பட்டது. திருக்கல்யாணத்தையடுத்து கோவிலை சுற்றி பல்வேறு பகுதிகளிலும் பக்தர்களுக்கு தாலிக்கயிறும், குங்குமம் வழங்கப்பட்டது

முன்னதாக திருக்கல்யாண நிகழ்ச்சிக்காக 30 லட்சம் மதிப்பிலான 10 டன் வண்ண மலர்கள் குறிப்பாக மதுரை மல்லிகை மற்றும் திண்டுக்கல், நிலக்கோட்டை, ஸ்ரீரங்கம், பெங்களூர், தாய்லாந்து உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வாசனை மிகுந்த வண்ண மலர்கள் கொண்டும், மேலும் 500 கிலோ பழங்கள் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் கிளி, நவ தானியங்களால் செய்யப்பட்ட பெயர்ப்பலகைகளால் திருக்கல்யாண மேடை முழுவதும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

கோவில் வளாகத்தை சுற்றிலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என்பதால் 20 எல் இ டி திரைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் அதிக வெயிலின் தாக்கம் இருப்பதால் 300 டன் தற்காலிக ஏசி பொறுத்தப்பட்டது. 1 லட்சம் பைகளில் தண்ணீர் பாட்டில் மற்றும் தாலிகயிறு அடங்கிய பிரசாதம் வழங்கப்பட்டது.

திருக்கல்யாண விழாவை முன்னிட்டு மாநகர காவல் ஆணையர் லோகநாதன் தலைமையில் 3ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

திருக்கல்யாண நிகழ்வில் கோவில் அறங்காவல்குழு தலைவர் ருக்மணி பழனிவேல்ராசன் மற்றும் அமைச்சர்கள் சேகர்பாபு, மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி ஆணையர் சித்ராவிஜயன், நீதிபதிகள் மற்றும் இந்து அறநிலையத்துறை அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இதையடுத்து மீனாட்சியம்மன் திருக்கல்யாணத்தை முன்னிட்டு 1லட்சம் பக்தர்களுக்கு மதுரை சேதுபதி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் திருக்கல்யாண விருந்தும் நடைபெற்றது. இந்த திருக்கல்யாண விருந்தின்போது சாப்பிட்ட கையோடு பக்தர்கள் திருக்கோயில் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மொய்ப்பந்தலில், திருக்கல்யாண மொய் எழுதி, பிரசாதம் பெற்றுக்கொள்வார்கள். மீனாட்சியம்மன் திருக்கல்யாண வைபத்தால் மதுரை மாநகரமே விழாக்கோலம் பூண்டது.

மதுரையில் உள்ள அனைவரும் தங்களது வீட்டு திருமணம் போன்று மீனாட்சியம்மன் திருக்கல்யாணத்தை பார்த்து சாமி தரிசனம் செய்து விருந்து உண்டு, மொய் எழுதும் பழக்கம் ஆண்டாண்டு காலமாக நடைபெற்றுவருகிறது. இந்த ஆண்டு ஆன்லைன் மூலமாக மொய் செலுத்தி ரசிது பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## மாநில தடகள போட்டியில் வென்றவர்களுக்கு சபாநாயகர் செல்வம் பரிசு வழங்கல்




புதுச்சேரி, மே 9-

புதுச்சேரி மாநில அளவில் நடந்த தடகள போட்டியில், வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சபாநாயகர் செல்வம் பரிசு வழங்கினார்.

புதுச்சேரி அமைச்சூர் அசோசியேஷன் சார்பில் மாநில அளவிலான 38 வது தடகள சாம்பியன்ஷிப் போட்டி தவளக்குப்பம் அரசு மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடந்தது. இதில், ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல் உள்ளிட்ட போட்டிகள் நடந்தன. போட்டியில் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. சிறப்பு விருந்தினராக சபாநாயகர் செல்வம் கலந்து கொண்டு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கினார்.

நிகழ்ச்சியில் அமைச்சூர் தடகள அசோசியேஷன் சார்பில், கோவிந்தசாமி, சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாணத்தை முன்னிட்டு தவெக மகளிர் அணி சார்பில் நீர் மோர் வழங்கல்



மதுரை, மே 9-

மதுரை ரிசர்வ்லைன் பகுதியில் மீனாட்சி சொக்கநாதர் திருக்கல்யாணத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் மதுரை வடக்கு மாவட்ட மகளிர் அணி சார்பாக, வடக்கு மாவட்ட தலைவி சத்யா அவர்கள் தலைமையில் பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கும் விழாவை, வடக்கு மாவட்ட செயலாளர் கல்லணை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர், மோர், தண்ணீர்பழம் அகியவற்றை வழங்கினார். இந்நிகழ்வில் சந்தானமுத்து, மகளிர் அணி மூத்த நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்,

## தில்லை நகர் பகுதியில் ரூ.27.57 லட்சம் செலவில் வாய்க்கால் வசதி சம்பத் எம்.எல்.ஏ., பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்



புதுச்சேரி, மே 9-

புதுச்சேரி நகராட்சி, முதலியார்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, தில்லை நகரில் சாலை மற்றும் வாய்க்கால் வசதி ஏற்படுத்தும் பணிக்கு ரூ.27,57,283/- மதீப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் (2023-2024) புதுச்சேரி நகராட்சி மூலம் சம்பத் எம்.எல்.ஏ., பூமிபூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார். உடன் புதுச்சேரி நகராட்சி ஆணையர் கந்தசாமி, செயற்பொறியாளர் சிவபாலன், உதவிப்பொறியாளர் வெங்கடாசலபதி, இளநிலைப்பொறியாளர் ரமேஷ் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

## இரண்டாம் உலகப் போர் 80ம் ஆண்டு நினைவு நாளில் அரசு சார்பில் கலெக்டர் குலோத்துங்கன் அஞ்சலி



புதுச்சேரி, மே 9-

இரண்டாம் உலகப்போர் நிறைவு பெற்றதன் 80ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. இதனையொட்டி கடற்கரைச் சாலையில் உள்ள போர் வீரர் நினைவுத் துணில் புதுச்சேரி அரசு சார்பில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன். புதுச்சேரி மற்றும் சென்னையிலுள்ள பிரான்ஸ் தூதர் சார்பில் புதுச்சேரிக்கான பிரான்ஸ் நாட்டுத் துணைத் தூதர் ஜீன் பிலிப் ஹூதர் ஆகியோர் இரண்டாம் உலகப்போரின் போது உயிர்நீத்த போர்வீரர்களின் நினைவாக மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியின்போது, இரண்டாம் உலகப்போரின் போது உயிர்நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இந்தியா, பிரான்ஸ் நாட்டின் தேசிய கொடிகள் ஏற்றப்பட்டு, இரு நாட்டு தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டு, மவுன அஞ்சலி செலுத்தப் பட்டது.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
• வெள்ளி • மே 9, 2025

# 15ந் தேதி ஆர்.முகேஷ் அறக்கட்டளையின் ஏழாம் ஆண்டு தொடக்க விழா



**புதுச்சேரி, மே 9-**

ஆர்.முகேஷ் அறக்கட்டளையின் ஏழாம் ஆண்டு தொடக்க விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அறக்கட்டளை நிறுவுனர் டாக்டர் ந.இரமேஷ் தலைமையில் 15.05.2025 அன்று சென்னை அரும்பாக்கம் அறக்கட்டளை அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர் அரி நாராயணன், சென்னை 105ஆவது வார்டு மாநகராட்சி மாமன்ற உறுப்பினரும் பொது சுகாதாரத்துறை உறுப்பினருமான ந.அதியமான், காவல்துறை ஆய்வாளர் அருள் மணிமாறன், சாகித்திய அகாதமி மேனாள் பொதுக் குழு உறுப்பினரும் புதுடெல்லி அரசு மொழிபெயர்ப்பாளருமான கலைமாமணி முனைவர் சுந்தர முருகன், மகாலட்சுமி எண்டர்பிரைசஸ் நிறுவனர் தேவராஜ் மற்றும் டாக்டர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆகியோர் பங்கேற்று தையல் இயந்திரங்கள், அரிசி மூட்டைகள், நோட்டுப் புத்தகங்கள், சேலைகள், விளையாட்டு உபகரணங்கள் போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளனர்.

பெரணமல்லூர் தொகுதியின் மேனாள் சட்டப்பேரவை உறுப்பினர் எதிரொலி மணியன் மற்றும், சேலம் ஓமலூர் தொகுதியின் மேனாள் சட்டப்பேரவை உறுப்பினர் அ.தமிழரசு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக இதில் பங்கேற்க உள்ளனர்.

தமிழ்நாடு கலை இலக்கியப் படைப்பாளர் கூட்டியக்க நிறுவுநர் 'சிற்றுளி' ராம். கணேஷ் தொகுத்து வழங்கும் இவ்விழாவில் அறக்கட்டளை நிறுவனர் அண்ணாநகர் டாக்டர் ந. இரமேஷ் அவர்களின் 'மனிதத்தால் மனிதம் செய்வோம்" நூலும் " நேசத்தோடு தேசத்தை மதிப்போம்" நூலும் வெளியிடப்பட உள்ளன.

# 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் விழுப்புரம் வி.ஆர்.பி பள்ளி மாணவி மாவட்டத்தில் முதலிடம்: மாவட்ட ஆட்சியர் பாராட்டு



**விழுப்புரம், மே 9-**

விழுப்புரம் வி ஆர் பி பள்ளியைச் சேர்ந்த ரோகினி 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 600க்கு 596 மதிப்பெண்கள் பெற்று, மாவட்டத்தில் முதலிடம் பிடித்து பெரும் சாதனை புரிந்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, மாவட்ட முதலிடம் பெற்ற ரோகினியை விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான் நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்தார். இந்நிகழ்வில் பள்ளித் தாளாளர் சோழன் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் அன்பு ஜெயக்குமார் விக்கிரவாண்டி வட்டாட்சியர் வேல்முருகன் தலைமை ஆசிரியர் கந்தசாமி உதவி தலைமை ஆசிரியர் பிரித்விராஜ் வழக்கறிஞர் மனோ சுரேஷ் பாபு பங்கேற்றனர்.

இரண்டாம் மதிப்பெண் ரித்தீஷ் , புகஷ் முகிலன் 600 க்கு 587 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் இரண்டாம் இடமும் பள்ளி அளவில் இரண்டாம் இடமும், பாத்திமா பீபி மற்றும் 600 க்கு 586 மதிப்பெண்கள் பெற்று பள்ளி அளவில் மூன்றாம் இடம் பிடித்தனர்.

மேலும், வி.ஆர்.பி பள்ளி கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெறுவது குறிப்பிடத்தக்கது. தொடர்ச்சியாக மாவட்ட அளவில் மூன்று வருடங்களாக 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலிடம்.பிடித்து சாதனை படைத்துள்ளார் இதற்கு உறுதுணையாக இருந்த ஆசிரிய பெருமக்களுக்கு நன்றியை தெரிவித்தனர்.

# செஞ்சி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்



**செஞ்சி, மே 9-**

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நல்லன்பிள்ளை பெற்றாள் ஊராட்சி கலைஞர் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன் தலைமை தாங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் மணிவண்ணன், அன்பு கிருஷ்ணன், கே.எஸ். ராஜேந்திரன், டிலைட் ஆரோக்கியராஜ், மன்னார், பஞ்சாட்சரம், ஊராட்சி மன்ற தலைவர் குமரவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பிரதிநிதி கதிரவன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் மாநில வர்த்தக அணி செயலாளரும், தலைமை கழக பேச்சாளர் கவிஞர். காசிமுத்து மாணிக்கம், விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொண்டு திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனைகளை எடுத்துரைத்தனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்று நான்காண்டுகால ஆட்சியில் உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார்.

முதலமைச்சரின் காலை உணவு திட்டம், கலைஞரின் மகளிர் உரிமை திட்டம்,மகளிர் விடியல் பயணத்திட்டம், புதுமைப் பெண், தமிழ் புதல்வன் திட்டங்கள், என் உயிர் காப்போம் 48, மக்களை தேடி மருத்துவம், தோழி விடுதிகள்என்னற்ற வகையில் தினம் தினம் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

ஆனால் ஒன்றிய பாஜக அரசு மும்மொழி கொள்கை மூலம் தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சித்து வருகிறது. புதிய கல்விக் கொள்கை வகுத்தவர்களில் பா.ஜ.க வை சேர்ந்தவர்களில் பல பேர் உள்ளனர். இதில் முக்கியமானவர் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பா.ஜ.க. எம்.பி.ரிஷிகாந்த் துபே என்பவரது எம்.பி.ஏ.கல்விச்சான்றிதழ் போலி என்று டெல்லி பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது என்றால் புதிய கல்விக் கொள்கையை வகுத்தவர்களில் எந்த அளவிற்கு நேர்மையாற்றவர்கள் என்பதையும் புதிய கல்விக் கொள்கைக்கு இப்பேற்பட்டவர்கள் வழி வகுத்தால் இத்திட்டம் எப்படி இருக்கும் என மாவட்ட செயலாளர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கேள்வி எழுப்பினார். தொடர்ந்து அவர் பேசுகையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் உழைப்பால் பெருந்தலைவர் காமராஜர் அடித்தளம் வகுத்த காரணத்தால் கோவையைச் சேர்ந்த 70 வயதுடைய ராணி என்ற மூதாட்டி 12ஆம் வகுப்பு பொது தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்.சாதிக்க வயது ஒரு தடை இல்லை என்பதற்கு திராவிட மாடல் அரசின் வெற்றிக்கு இது ஒரு எடுத்துக்காட்டு என அவர் பெருமிதம் தெரிவித்தார்.

கூட்டத்தில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் விஜயராகவன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜயகுமார் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சிவப்பிரகாசம், மாவட்டமகளிர் அணி துணை அமைப்பாளர்கள் சுதா பாஸ்கரன், புஷ்பா சேகர், செத்தவரை ஊராட்சி மன்ற தலைவர் தீர்தமலை,நல்லான் பிள்ளை பெற்றால் ஊராட்சி அவைத்தலைவர் டாக்டர் கதிர்வேல், ஏரி சங்கத் தலைவர் தேவராஜன், நந்தன் கால்வாய் தலைவர் தாமோதரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரஞ்சித் குமார், கிளைகழகசெயலாளர்கள் ஸ்டீபன், கார்த்திக், குமார், அண்ணாமலை, பாபு, நிர்வாகிகள் அமரேசன், ரங்கநாதன், ராஜேந்திரன், புகழேந்தி, நேதாஜி, தேவிபாலன் ,சாந்தினி விஜயன், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.ஒன்றிய கவுன்சிலர் முரளி நன்றி கூறினார்.

# கருவேப்பிலைபாளையம் கிராமத்தில் இளைஞர்களின் முயற்சியால் அமரர் ஊர்தி வாகனம்

**திருவெண்ணெய் நல்லூர், மே 9-**





விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் வட்டம் கருவேப்பிலைபாளையம் கிராமத்தில் இறந்தவர்களின் உடலை கொண்டு செல்வதற்கு இலவச அமரர் ஊர்தி வாகனம் இளைஞர்களின் முயற்சியால் ரூ.1 லட்சத்து 54 ஆயிரம் மதிப்பில் செய்யப்பட்டு கருவேப்பிலைபாளையம் கிராமத்தில் இறந்து போனவர்களின் உடலை சுடுகாட்டிற்கு கொண்டு செல்வதற்கு ஏழை எளிய மக்கள் சிரமப்பட்டனர். அவர்களுக்கு உதவிடும் வகையில் இந்த கிராமத்தில் உள்ள இளைஞர்கள் முயற்சியால் ஊரில் உள்ள பெரியவர்கள் இளைஞர்கள் உதவியால் ரூ. 1 லட்சத்து 54ஆயிரம் மதிப்பில் அமரர் ஊர்தி வாகனம், நிறுத்துவதற்கான கொட்டகை, இரண்டு 20 அடி பைப், கட்டப்பாறை, மண்வெட்டி ஸ்ட்ரே வி மற்றும் இறுதி சடங்கு செய்வதற்கான இதர பொருட்கள் செய்து மக்களுக்காக ஒப்படைத்தனர். மேலும் வாகனம் செய்வதற்கு உதவிசெய்தவர்களின் பெயருடன் வரவு செலவு குறித்த பேனரையும் வைத்தனர். இது குறித்து இந்த கிராமத்தை சேர்ந்த இளைஞர்கள் கூறியதாவது: எங்கள் கிராமத்தில் உள்ளவர்கள் இறந்துவிட்டால் வெளியூர் சென்று வாகனம் வாடகைக்கு எடுத்து வந்து உடலை ஏற்றி சென்று அடக்கம் செய்து வருகின்றோம். இதனால் மக்கள் மிகுந்த சிரமப்பட்டனர். சுடுகாட்டிற்கு பாடை கட்டி கொண்டு செல்வதற்கும் சிரமமாக உள்ளது. இதனால் ஏழை எளிய மக்கள் பண வசதி இல்லாதவர்கள் முதியவர்கள் வசிக்கும் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மிகுந்த கஷ்டப்பட்டனர். இவர்களுக்கு உதவிடும் வகையில் இந்த வாகனத்தை செய்துள்ளோம். மேலும் எங்கள் கிராமத்தில் யாரேனும் அடக்கம் செய்ய முடியாமல் தவித்து வந்தால் அவர்களுக்கு உதவிடும் வகையில் நாங்களே முன் நின்று அடக்கம் செய்யவும் தயாராக உள்ளோம் என அவர்கள் கூறினார்கள். இந்த செயலை அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பாராட்டுக்கள் தெரிவித்தனர்.

# சொத்து வரி, குடிநீர் கட்டணம் செலுத்தாமல் உள்ள கடை, வீடுகளை நிரவி கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகள் ஆய்வு

**காரைக்கால், மே 9-**

சொத்து வரி, குடிநீர் கட்டணம் செலுத்தாமல் உள்ள கடை, வீடுகளை நிரவி கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகள் நேற்று ஆய்வு செய்தனர்.

காரைக்காலை அடுத்த நிரவி கொம்யூன் பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதிகளில், தொழில் உரிமமின்றி நடத்தப்படும் கடைகள் மற்றும் தொழில் நிறுவனங்கள், சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்தாமல் அதிகளவில் நிலுவையில் உள்ள கடைகள் மற்றும் வீடுகளை, ஆணையரின் உத்தரவின்பேரில், அலுவலக மேலாளர் ஷேக் அலாவுதீன், இளநிலை பொறியாளர் முருகன் தலைமையில் கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர்கள் நேற்று ஆய்வு செய்து எச்சரித்தனர்.

மேலும், வரும் 15.5.2025 க்குள் 31.3.2025 வரை நிலுவையில் உள்ள சொத்து வரி மற்றும் குடிநீர் வரிகளை உடனடியாக செலுத்தவும், அதுபோல் இதுவரை தொழில் உரிமம் பெறாமலும், புதுப்பிக்கப்படாமலும் உள்ள தொழில் நிறுவனங்கள் உடனடியாக தொழில் உரிமைத்தை புதுப்பித்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில், புதுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்களுக்கு வாய் வழியாகவும் துண்டு பிரசுரங்கம் மூலமாகவும் தெரியப்படுத்தி வந்துள்ளனர்.

# கருங்காலிப்பட்டு ஸ்ரீமுத்தால்வாழியம்மன் கோயில் தேர் திருவிழா

**விழுப்புரம், மே 9-**

விழுப்புரம் மாவட்டம் காணை அருகே உள்ள கருங்காலிப்பட்டு கிராமத்தில் ஸ்ரீ முத்தால்வாழியம்மன் விநாயகர் தேர் வெகு விமர்சையாக நடைபெற்றது. 1ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கிய திருவிழா ஒன்றாம் நாள் காமதேனு வாகனத்தில் அம்மன் வீதி உலா, இரண்டாம் நாள் சிங்க வாகனத்திலும், நேற்று எட்டாம் நாளான குதிரை வாகனத்தில் வீதி உலா நடைபெற்றது. இதனை தொடர்ந்து தினந்தோறும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்காரம் செய்யப்பட்டு 9ம் நாள் அம்மனை தேரில் ஏற்றி சிவ வாத்தியம் முழங்க 400க்கும் மேற்பட்ட பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து தரிசனம் செய்தனர்.





# +2 பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கவர்னர் வாழ்த்து



புதுச்சேரி, மே 9-

புதுச்சேரியில் பிளஸ் 2 பொது தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கவர்னர் கைலாஷ்நாதன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாடு பாடத்திட்டத்தின்கீழ், 2025 ஆண்டுக்கான மேல்நிலை பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன. அதில் தேர்ச்சி பெற்றுள்ள புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றுள்ள மாணவ மாணவிகளை மனதார பாராட்டுகிறேன். இது உங்கள் உழைப்புக்கும் முயற்சிக்கும் கிடைத்த வெற்றி.

புதுச்சேரி மற்றும் காரைக்காலை சேர்ந்த 101 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி விகிதமும், மொத்தம் 582 மாணவ மாணவிகள் பல்வேறு பாடங்களில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்திருப்பதும் மகிழ்ச்சியை தருகிறது.

மொத்தம் 98.53 சதவீதம் என்ற சிறப்பான, மாணவர் தேர்ச்சி விகிதத்தை அளித்து புதுச்சேரி மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ள பள்ளிகளுக்கும், கல்வித்துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் ஆட்சியர் ஆய்வு



திருவண்ணாமலை, மே 9-

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் சித்ரா பௌர்ணமி 2025 நடைபெறவுள்ளதை முன்னிட்டு கிரிவலப்பாதையில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் சித்ரா பௌர்ணமி 2025 நடைபெறவுள்ளதை முன்னிட்டு பக்தர்கள் எவ்வித சிரமுமின்றி சுவாமி தரிசனம் செய்து கிரிவலம் மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வுக்கூட்டம் நடத்தியும், நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள்.

அதன்தொடர்ச்சியாக இன்றையதினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பக்தர்களுக்கு தேவையான குடிநீர் வசதிகள் குறித்து கிரிவலப்பாதையை சுற்றியுள்ள ஆடையூர், அடிஅண்ணாமலை, வேங்கிக்கால், ஆணாய்பிறந்தான் ஆகிய பகுதிகளில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்களை ஆய்வு மேற்கொண்டார்கள். தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை சார்பாக கட்டப்பட்ட சுகாதார வளாகங்களை நேரில் சென்று பார்வையிட்டு அடிப்படை வசதிகள் குறித்தும், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலமாக தூய்மையாக பராமரிக்கப்படுகின்றனவா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டு கட்டண முறைகள் குறித்து கேட்டறிந்தார்கள். மேலும் கிரிவலப்பாதையில் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்படும் கட்டுப்பாட்டு அறையினை ஆய்வு மேற்கொண்டு, முறையாக கண்காணிப்பு கேமராக்கள் இயங்குகின்றனவா என்பதை உறுதிசெய்ய துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார், மாநகராட்சி ஆணையாளர் செல்வபாலாஜி, திருவண்ணாமலை வட்டாட்சியர் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுவையில் நில அளவையர், வரைவாளர் உரிமம் பெற விண்ணப்பங்கள் வரவேற்பு

புதுச்சேரி, மே 9-

புதுச்சேரி அரசின் நில அளவை பதிவேடுகள் துறை இயக்குனர் செந்தில்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: உரிமம் பெற்ற நில அளவையர், வரைவாளர்களை பணியில் ஈடுபடுத்த தற்போதைய விதிகளில் அரசு சில திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. இதனால் உரிமம் பெற்ற அளவையர், வரைவாளராக சேர விரும்புவோர் நில அளவை பயிற்சி நிறுவனத்தில் இரண்டு மாதம் கட்டாயம் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். கூடுதலாக ஒரு மாதம் கள பயிற்சி அளிக்கப்படும்.

இந்த பயிற்சி முடித்த பின்னரே உரிமம் பெற்றவராக பணியில் ஈடுபட முடியும். புதுவையைச் சேர்ந்த தகுதியானவர்களிடம் நில அளவையர், வரைவாளர் உரிமம் பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

ஐ.டி.ஐ., சிவில் இன்ஜினியரிங், கட்டிடக்கலை பட்டம் பெற்று இருக்க வேண்டும். ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தை அரசின் வருவாய்த்துறை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம். விண்ணப்ப மூப்பு அடிப்படையில் தேர்வு நடைபெறும். பயிற்சி மையத்தில் பயிற்சி முடித்த பின் பணியமர்த்தப்படுவர். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை சாரம் நில அளவை பதிவேடுகள் துறையில் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஆலங்குளம் ஊராட்சியில் வளர்ச்சித்திட்டப் பணிகளை ஆட்சியர் ஆய்வு



தென்காசி, மே 9-

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தென் மாவட்டத்திற்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். பொதுமக்களுக்குத் தேவையான வளர்ச்சித்திட்டங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு சேர்க்க அறிவுறுத்தி உள்ளார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளையும், நியாய விலைக் கடையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரிசி, சீனி,பருப்பு பாமாயில் ஆகியவற்றின் தரம் மற்றும் இருப்பு குறித்தும், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கலைஞரின் கனவு இல்லத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கோப்புகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என உரிய அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல் கிஷோர், தெரிவித்தார். இந்த ஆய்வின் போது, ஆலங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர் கல்யாண ராமசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஓய்வூதியர் குறைதீர் நாள் கூட்டம்



நாமக்கல், மே 9-

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில் 2025 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியர் குறைதீர் நாள் மற்றும் பென்சன் அதாலத் கூட்டம் நடைபெற்றது.

நாமக்கல் மாவட்டத்தில் 04.04.2025 முதல் 15.04.2025 வரை 19 மனுக்கள் பெறப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இன்றைய தினம் நடைபெற்ற ஓய்வூதியர்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் ஓய்வூதியர்கள் மற்றும் சங்க உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும், பென்சன் அதாலத்தில் மாநில கணக்காயர் அலுவலகத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட 88 ஓய்வூதியக் கருத்துருக்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் ஓய்வூதியர்கள் சங்க உறுப்பினர்கள் 11 நபர்கள், 14 ஓய்வூதியர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் குடும்ப ஓய்வூதியம். குடும்ப பாதுகாப்பு நிதி. விடுப்பில் சென்ற நாட்களை முறைப்படுத்துதல், பணி காலத்தில் இறந்த ஊழியரின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பயன்கள். சிறப்பு ஓய்வூதியம். வீட்டு வாடகை படி வழங்கியதில் உள்ள வித்தியாச தொகை, மருத்துவ செலவுத்தொகை, தர ஊதியம் உயர்த்தி வழங்கப்பட்ட ஆணை நகல், விடுப்பில் சென்ற காலத்திற்கு விடுப்பு கால ஊதியம், திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதிய பலன்கள், பணிக்கொடை, குறைந்த பட்ச குடும்ப ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு மனுக்களை ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் வழங்கினார்கள்.

ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களின் மனுவினை பரிசீலித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு விரைந்து தீர்வு வழங்க வேண்டும். மேலும், ஓய்வூதியர்கள் அனைவரும் நம்மை போன்று பல்வேறு அரசுத்துறைகளில் நமக்கு முன்னர் பணிசெய்தவர்கள் தான் என்பதை கருத்தில் கொண்டு முழு ஈடுபாட்டுடன் இந்த மனுக்களுக்கு விரைந்து தீர்வு வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சென்னை. துணை மாநில கணக்காயர் சி.ஜெ. கார்த்திக்குமார், சென்னை, கருவூல கணக்கு இயக்குநரகம் (திட்டங்கள்) கூடுதல் இயக்குநர் ப.சந்திரன், கருவூல கணக்கு இணை இயக்குநர் (கோவை) எ.பால்முருகன், சென்னை கருவூல கணக்கு இயக்குநரகம் (ஓய்வூதியர் பிரிவு) கணக்கு அலுவலர் கு.அருள். மாவட்ட கருவூல அலுவலர் கி.ஜெய்சங்கர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) சு.கருணாகரன், சென்னை மாநில கணக்காயர் அலுவலர்கள். துறை சார்ந்த அலுவலர்கள், ஓய்வூதியர்கள் சங்க உறுப்பினர்கள், ஓய்வூதியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருச்சியில் கலைஞர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை திறந்து வைத்தார் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்



திருச்சி,, மே 9-

திருச்சி மாவட்டம் பஞ்சப்பூரில் 40 ஏக்கரில் ரூ.408.36 கோடியில் அதிநவீன வசதிகளுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார். அத்துடன், பஞ்சப்பூர் புதிய பேருந்து முனையம் முன்பு கருணாநிதி சிலையையும் முதல்அமைச்சர் திறந்து வைத்தார். இந்த பேருந்து நிலையம் ஒரு நாளைக்கு சுமார் 3,200 பேருந்துகளை கையாளும் திறன் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது;

"இது பஞ்சப்பூர் அல்ல.. எல்லா ஊரையும் மிஞ்சப்போகும் மிஞ்சும்பூர். திமுக ஆட்சியில் இவ்வளவு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதை எண்ணி வியப்பாக உள்ளது. அடுத்து வரும் திமுக ஆட்சியிலும் நமது ஆட்சியின் சாதனைகளை நாமே முறியடிப்போம். திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எதிர்க்கட்சிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அதிமுகவின் இருண்ட ஆட்சியில் இருந்து மீட்டு திமுக விடியல் ஆட்சி நடத்தி வருகிறது. திராவிட மாடல் ஆட்சியின் 2.0 தொடரும் அதற்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும். திமுக ஆட்சியில் இனி நாம் போகும் பாதை சிங்கப்பாதை.

அது ராக்கெட் வேகத்தில் இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்வுக் கூட்டம்



கடலூர், மே 9-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட அளவிலான சிறப்பு குறைதீர்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகள் சிரமத்தினை கருத்தில் கொண்டு பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இலவச வீட்டு மணைப்பட்டா, விபத்து உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, அடையாள அட்டை, முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்யோகமாக வடிவமைக்கப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலியும் என அவர்களுக்கு தேவையான அனைத்து நலத்திட்டங்களும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகள் வெகுதூரம் செல்லாமல் தங்கள் பகுதியில் உட்கோட்டங்களில் அடையாள அட்டை பெறும் வகையில் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகள் தங்களின் மனுக்களை வழங்கவும், அரசு நலத்திட்ட உதவிகளை பெறவும் குறைதிர்க்கும் கூட்டம் காலாண்டுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்று (08.05.2025) நடைபெற்ற இக்கூட்டத்தில் 568 மனுக்கள் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்பட்டது. இக்கூட்டத்தில் 1 பயனாளிக்கு ரூ.1,08,000 மதிப்பீட்டிலான பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலியும். 4 பயனாளிகளுக்கு தலா 3,000 வீதம் மொத்தம் ரூ.12,000 மதிப்பீட்டிலான காதொலி கருவிகளும், ஒரு பார்வையற்ற மாற்றுத்திறனாளி பயனாளிக்கு 5.2,500 மதிப்பீட்டிலான மடக்கு ஊன்றுகோலும் வழங்கப்பட்டது.

மேலும், கடலூர் மாவட்ட அனைத்து துறை அலுவலர்களும் மேற்காணும் சிறப்பு குறைதீர்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்களை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கென செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்களை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ம. இராஜசேகரன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் பாபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● வெள்ளி ● மே 9, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# சித்தர்கள் கோயிலில் 34ஆம் ஆண்டு உற்சவ விழா





**மதுரை, மே 9-**

மதுரை மாவட்டம் விளாங்குடியில் உள்ள ஸ்ரீ மாக்கமடையான் ஸ்ரீ முனியாண்டி சுவாமி மாலியப்பாறை கருப்பசாமி நாகம்மாள் முத்தாலம்மன் செல்வ விநாயகர் பாலசுப்பிரமணியர் 7 சப்த கன்னிமார்கள் மற்றும் 18 சித்தர்கள் திருக்கோவில் 34 ஆம் ஆண்டு உற்சவ விழா வெகு விமர்சையாக நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய நிகழ்வான உலக நன்மை வேண்டியும் விவசாயம் செழிக்கவும் கல்வி மேம்படவும் மழை பெய்ய வேண்டியும் விசாலாட்சி அம்மாள் குழுவினரின் திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏழு கன்னிப்பெண்கள் குத்துவிளக்கு பூஜையை துவக்கி வைத்தனர். இதில் அப்பகுதியை சேர்ந்த பெண்கள் சிறுமிகள் பலர் கலந்துகொண்டு திருவிளக்கு ஏற்றி சுவாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை பொண்ணுகணேசன் மதன் மாரி வேல்பாண்டி வினோத் காமாட்சி ராமச்சந்திரன் லட்சுமணன் கனி குமார் மற்றும் பூசாரி முத்து கோனார் மாணிக்கம் தலைமையில் விழா கமிட்டியினர் சிறப்பாக செய்திருந்தனர்

# நரம்பை கிராமத்தில் ரூ.2 கோடி செலவில் மீன் வலை உலர்த்தும் கூடம் அமைக்க அரசாணை வெளியீடு



ஏம்பலம் தொகுதி நரம்பை கிராம மக்களின் பல்லாண்டுகால கோரிக்கையான "மீன் வலை உலர்த்தும் கூடம்" அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முதல்வர் மற்றும் அமைச்சரிடம் கொண்டுசென்று சட்டமன்ற உறுப்பினரின் சீரிய முயற்சியினால் நரம்பை கிராமத்தில் சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவில் இரண்டு மீன் வலை உலர்த்தும் கூடம் அமைக்க அரசாணை வெளியிட்டுள்ளது.

## மணவெளி டி.என்.பாளையத்தில் ரூ.64 லட்சத்தில் வளர்ச்சி பணிகள்

# சபாநாயகர் செல்வம் தொடங்கி வைத்தார்




**புதுச்சேரி, மே 9-**

புதுச்சேரி மணவெளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டி.என்.பாளையம் பகுதியில் பொதுப்பணித்துறை, வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் மின்துறை மூலம் ரூ.63.50 லட்சம் மதிப்பிலான பணிகளை சபாநாயகர் செல்வம் நேற்று தொடங்கி வைத்தார். டி.என்.பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள அபிஷேகப்பாக்கம் ஏரியை புதுச்சேரி அரசு பொதுப்பணித்துறை நீர் பாசன கோட்டம் மூலம் ரூ. 43.44 லட்சம் மதிப்பில் தூர்வாரி தூய்மைப்படுத்தும் பணி மற்றும் அரியாங்குப்பம் வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலம் டி.என். பாளையம் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ. 5.10 லட்சம் மதிப்பில் பொறையாத்தம்மன் கோவில் குளத்தை தூர்வாரி ஆழப் படுத்தும் பணி மற்றும் மின்துறை மூலம் ரூ. 15 லட்சம் மதிப்பில் டி.என்.பாளையம் அபிஷேகப்பாக்கம் பிரதான சாலை மற்றும் டி.என். பாளையம் பகுதியில் உள்ள அனைத்து விதிகள் மற்றும் இருளர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் புதிய மின் விளக்குகள் அமைக்கும் பணிகளை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டப்பேரவை தலைவருமான சபாநாயகர் செல்வம் அந்தந்த பகுதிகளுக்கு சென்று நேற்று தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் வட்டார வளர்ச்சி அதிகாரி கார்த்திகேசன், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் செல்வராஜ், இளநிலை பொறியாளர் ஸ்ரீநாத் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி பொறியாளர் ராமன், இளநிலை பொறியாளர் சிவஞானம், பணி ஆய்வாளர் கணேசன் மற்றும் அந்தந்த பகுதி முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசின் சாதனைகள் குறித்து புகைப்படக் கண்காட்சி



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் நாலாட்டின்புத்தூர் கிராமத்தில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த புகைப்படக்கண்காட்சியினை பொது மக்கள் பார்வையிட்டனர்.

# மூத்த செய்தியாளர் தணிகைத்தம்பி படத்திறப்பு விழா

## அரசியல், பொதுநல அமைப்பினர் மலரஞ்சலி



**புதுச்சேரி, மே 9-**

மறைந்த மூத்த செய்தியாளர் இரா.தணிகைத்தம்பி நினைவேந்தல் நிகழ்வு இராதே அறக்கட்டளை சார்பில் திராவிடர் விடுதலைக் கழகம் தோழமைக்கூடல் அலுவலகத்தில் நடைபெற்றது.

இராதே அறக்கட்டளை தலைவர் பொறிஞர் இரா.தேவதாசு தலைமைத் தாங்கினார். மக்கள் உரிமைக் கூட்டமைப்பு செயலாளர் கோ.சுகுமாரன், புதுவை தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் புதுவை தமிழ்நெஞ்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பாலாஜி, பன்னீர்செல்வம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாரா. கலைநாதன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலர் இரா. இராஜாங்கம், திராவிடர் கழகத் தலைவர் சிவ.வீரமணி, மண்டலத் தலைவர் வெ.அன்பரசன், மக்கள் வாழ்வுரிமை இயக்கச் செயலாளர் கோ.அ.ஜெகன்நாதன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் லோகு. அய்யப்பன், சமூக நீதிப் பேரவை செயலாளர் து.கீதநாதன், தமிழர்களம் செயலாளர் கோ. அழகர், கலை இலக்கிய பெருமன்றம் செயலாளர் மு.சி.இராதாகிருஷ்ணன், தனித்தமிழ்க் கழகச் செயலாளர் சீனு.அரிமாப்பாண்டியன், சொல்லாய்வுச் செல்வர் சு.வேல்முருகன், புதுச்சேரி தன்னுரிமைக் கழகத் தலைவர் தூ.சடகோபன், வெற்றித் தமிழர் கழகத் தலைவர் தி.கோவிந்தராசு, புதுச்சேரி மாணவர் கூட்டமைப்பு தலைவர் சீ.சு.சாமிநாதன், இராவணன் பகுத்தறிவு இயக்கத் தலைவர் அர.அபிமன்னன், பூவுலகின் நண்பர்கள் தலைவர் சீனு.தமிழ்மணி, அண்ணா அறக்கட்டளை தலைவர் சிவ. இளங்கோ, தமிழ்தேசிய பேரியக்கத் தலைவர் இரா.வேல்சாமி, சுற்றுச்சூழல் கலாச்சார புரட்சி இயக்கத் தலைவர் பிராங்கிளின் புரான்சுவா, ஓவியர் இரா.அன்பழகன், செங்கமலத் தாயார், ஓவியர் தமிழ்ச்செல்வி, ஊடகவியலாளர்கள் இளவமுதன், தயாளன், ஆனந்தி, பெருமாள் உட்பட பலர் கலந்துகொண்டு மலர் வணக்கம் செலுத்தினர்.

# நமக்கு நாமே திட்டத்தின் கீழ் திட்டப்பணிகளை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சி, ஆண்டிபாளையத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டம், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்கள். உடன் மேயர் தினேஷ்குமார் உள்ளார்.


# வன உரிமை சட்டம் குறித்து அலுவலர்களுக்கு பயிற்சி




வன உரிமை சட்டம் 2006 குறித்து அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வன அலுவலர் டி.கே. அசோக்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர்கள் மதுசெழியன் (வேலூர்), அறிவுடைநம்பி (இராணிப்பேட்டை), குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமால் மற்றும் வேலூர் (ம) இராணிப்பேட்டை மாவட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# ஜம்மு காஷ்மீரில் உள்ள தமிழக மாணவர்கள் பாதுகாப்பாக தாயகம் திரும்ப நடவடிக்கை: ஸ்டாலின்



# முப்படை தளபதிகளுடன் ராஜ்நாத் சிங் இன்று ஆலோசனை

# ஜம்மு எல்லையில் ஊடுருவ முயன்ற 7 பாகிஸ்தான் பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 9-5-2025 வெள்ளிக்கிழமை •பக்கம் 8 • ரூ.600 காசுகள்